இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
சட்டமாணிப் பட்டப்படிப்புத் திட்டம்
மட்டம் 03 – 2008/2009
**LWU 1411** – இலங்கை சட்டங்களுக்கான ஓர் அறிமுகம்
தொடர் மதிப்பீட்டுப் பரீட்சை - 2
காலம்: 40 நிமிடங்கள்

திகதி: 26.11.2008 நேரம்: மு.ப 9.30 – மு.ப 10.10

ஒரு வினாவிற்கு மாத்திரம் விடை தருக.
தெளிவற்ற கையெழுத்துக்களுக்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

1. "ஆங்கில காலணித்துவ ஆட்சியின் போது ஆங்கில சட்டத்தினைப்பற்றிய தமது விசுவாசம் காரணமாக குறிப்பிட்ட சில நீதிபதிகள் உரோமன் டச்சு சட்டத்திற்கு பதிலாக ஆங்கில சட்டத்தின் பிரயோகத்தினை நியாயப்படுத்துவதற்காக வித்தியாசமான காரணங்களை வழங்கினர்".

   பிரித்தானிய காலணித்துவ நிர்வாக காலப்பகுதியின் போது உரோமன் டச்சு சட்டத்தின் மீதான நீதித்துறை மனப்பாங்கினை குறிப்பிடுவதனூடு இக்கூற்றினை ஆராய்க.

2. காலியில் வசித்த தமிழ் பெற்றோர்களுக்கு 1965ஆம் ஆண்டு தேவன் மகனாகப் பிறந்தான். 1983ஆம் ஆண்டு இனக் கலவரத்திற்குப் பின்னர் தேவனது பெற்றோர் அவனுடன் யாழ்ப்பாணம் சென்று அங்கேயே நிரந்தரமாக வசித்தனர். யாழ்ப்பாணத்தின் பாடசாலையொன்றில் தேவன் சேர்க்கப்பட்டான். 1985ஆம் ஆண்டு பேராதெனிய பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்டான். பல்கலைக்கழக கல்வியினை பூர்த்தி செய்து விட்டு வவுனியாவில் உள்ள முன்னணி நிதிக்கம்பனி ஒன்றில் முகாமையாளராக இணைந்தான். 1995இல் வவுனியாவில் வசித்த தமிழ் பெண்ணான கமலினியை தேவன் மணந்தான். திருமணத்தின் பின் யாழ்ப்பாணத்தில் உள்ள தேவனின் பெற்றோர்களின் இல்லத்தில் அவர்கள் வசித்தனர். திருமணத்தின் மூலம் அவர்களுக்கு கீதா எனும் ஒரு பெண் குழந்தை பிறந்தது. 1998ஆம் ஆண்டு கீதா பிறந்ததன் பின்னர் தேவன் வேலையில் இருந்து விலகியதுடன் யாழப்பாணத்தில் இருந்து வெளியேறினான். அவன் கொழும்புக்கு வந்து ஓர் காப்புறுதிக் கம்பனியில் மனிதவள முகாமையாளராக இணைந்து கொண்டான். தனது குடும்பத்தினை காண அவன் யாழ்ப்பாணம் செல்வதுடன் தொடர்ச்சியாக அவர்களுக்கு பணம் அனுப்பினான். அவன் தனது குடும்பத்தினை கொழும்பிற்கு கொண்டுவரக் கருதியதுடன் சிறு வீடு ஒன்றினை தெகிவளையில் கொள்வனவு செய்தான். 2001ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் உள்ள தனது ஆதனத்தினை விற்பனை செய்தான். 2003ஆம் ஆண்டு கீதா கொழும்பில் உள்ள ஓர் முன்னணிப் பாடசாலையில் சேர்க்கப்பட்டாள். 2008ஆம் ஆண்டு தேவன் அலுவலத்திற்கு செல்லும் பொழுது பம்பலப்பிட்டியவில் இடம்பெற்ற மோட்டார் விபத்தில் திடீர் என மரணம் அடைந்தான்.

   தேவன் தேசவழமைச் சட்டத்தினால் ஆளப்படுகின்றானா அல்லது பொதுச்சட்டத்தினால் ஆளப்படுகின்றானா என்பதனை அறிய கமலினி உம்மிடம் ஆலோசனை கோருகின்றாள். அவளுக்கு ஆலோசனை வழங்குக.

(பதிப்புரிமையுடையது)